**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை - திருமதி. S. இந்திராகாந்தி, எம்.எல்.,

சார்பு நீதிபதி, நாகப்பட்டினம்.

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆனித்திங்கள் 26-ம் நாள்

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் நாள் வெள்ளிக்கிழமை

## CNR:NO: TNNG03-000488-2026

**இந்து திருமண அசல் மனு எண்.112/2014**

முனுசாமி ......................மனுதாரர்

..எதிர்..

கனிமொழி .................எதிர்மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பாக இன்று 02.07.2026 விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. கு. காளிதாசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சூரியபிரசாத் அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......................

**ஆணையுரை**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 23.01.2013 மனுதாரர் வீட்டில் நடந்த திருமணத்தின் அடிப்படையில் மனுதாரருடன் எதிர்மனுதாரர் வந்து சேர்ந்து வாழ உத்தரவிட கோரியும், வழக்கின் செலவுத் தொகையை எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்க உத்தரவிடக்கோரியும், இதர உகந்த பரிகாரங்கள் வழங்க கோரியும், இந்து திருமண சட்டம் பிரிவு 9 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.10 15:22:44 +0530

**I. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 23.01.2013 தேதியன்று நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தாலுக்கா, திருப்பூண்டி கிழக்கு காமேஸ்வரம் ஆணையன் தோப்பு முகவரி வீட்டில் வைத்து இந்து சாஸ்திர சம்பிரதாய முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்தின்போது மனுதாரரின் பெற்றோர் 10 சவரன் தங்க நகைகள் மற்றும் வீட்டு சீர்வரிசை பொருட்கள் அனைத்தும் வாங்கிக்கொடுத்துள்ளார்கள் என்றும், திருமணத்திற்கு பிறகு மனுதாரரும், எதிர்மனுதாரரும் மனுதாரர் வீட்டில் குடும்பம் நடத்தினார்கள் என்றும், எதிர்மனுதாரருக்கு பல ஆண்டுகளுக்கு முன்பே மனநிலை பாதிக்கப்பட்டிருந்ததென்றும், அதற்காக தொடர்ந்து மனநல மருத்துவரிடம் சிகிச்சை பெற்று வருவதும் திருமணத்திற்கு பின்புதான் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், மனுதாரருக்கு மேற்படி விபரம் தெரியக்கூடாது என்பதற்காக எதிர்மனுதாரரின் தாயார் அடிக்கடி எதிர்மனுதாரரை வீட்டிற்கு கூட்டி சென்றுவிடுவதும், மனுதாரருடன் இருக்க அனுமதிக்காமலும் இருந்து வருவது மனுதாரருக்கு தெளிவாக தெரியவந்துள்ள நிலையில் மனுதாரர் திருமணம் முடிந்த 2 மாதங்கள் கழித்து எதிர்மனுதாரரை மலேசியாவிற்கு அழைத்து சென்று சுமார் 2 ஆண்டு காலம் குடும்பம் நடத்தியுள்ளார் என்றும், எதிர்மனுதாரர் எட்டு மாத கர்ப்பிணியாக இருந்தபோது ஊருக்கு அழைத்து வந்து வளையல் காப்பு நிகழ்ச்சி நடைபெற்றது என்றும், அதுமுதல் எதிர்மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டில் இருந்து வந்த நிலையில் 26.08.2015 அன்று மன்னார்குடி மருத்துவமனையில் ஆண்குழந்தை பிறந்தது என்றும், குழந்தை பிறந்த 3 மாதங்கள் கழித்து எதிர்மனுதாரரையும், குழந்தையையும் மனுதாரர் வீட்டாரும், உறவினர்களும் அழைத்து வந்தார்கள் என்றும், அப்போது மனுதாரர், எதிர்மனுதாரருக்கு 9 சவரன் தாலிசெயினும், 3 சவரனில் கழுத்துசெயின், ஒரு சவரன் பிரேஸ்லெட்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.10 15:22:50 +0530

ஒன்றும், அதேபோல் குழந்தைக்கு 2 சரவன் அரைஞான்கயிறு, 1 சவரன் கைக்கு தங்க காப்பும் அணிவித்தார் என்றும், மேற்படி நகைகள் அனைத்தும் எதிர்மனுதாரர் வசம் உள்ளது என்றும், சுமார் ஒரு மாத காலம் மட்டும் எதிர்மனுதாரர் குழந்தையுடன் மனுதாரர் வீட்டில் இருந்தார் என்றும், பின்னர் மனுதாரர் வெளிநாடு சென்றுவிட்டார் என்றும், மனுதாரர் வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வருகிறபோதெல்லாம் எதிர்மனுதாரருக்கு மனநிலை பாதிக்கப்பட்டிருந்ததால் 27.08.2016 அன்று தஞ்சாவூரில் உள்ள மருத்துவர் வெங்கடேசன் என்ற மனநல மருத்துவரிடம் சிகிச்சைக்கு சேர்த்து மனுதாரரே செலவு செய்தார் என்றும், மனுதாரரின் தாயார் அடிக்கடி வந்து எதிர்மனுதாரரை அழைத்து சென்றுவந்த நிலையில் கடந்த 2017ம் ஆண்டு நவம்பர் மாதம் தீபாவளியன்று மாலை எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் மற்றும் சில நபர்கள் வந்து மனுதாரரை வீட்டின் முன் நின்று அசிங்கமாக பேசி சத்தம்போட்டு எதிர்மனுதாரரை குழந்தையுடன் அழைத்து சென்றுவிட்டார்கள் என்றும், கடந்த 03.03.2018 தேதியன்று மனுதாரர் தனது குழந்தையை பார்த்துவிட்டு எதிர்மனுதாரரையும் அழைத்து வருவதற்காக சென்றபோது எதிர்மனுதாரரும், அவரது பெற்றோர்களும் குழந்தையை பார்க்க மறுத்துவிட்டனர் என்றும், சில ஊர் முக்கியஸ்தர்களிடம் சொல்லி குழந்தையை தூக்கி சென்று இரண்டு நாள் கழித்து அனுப்பிவிடுவதாக தெரிவித்து அழைத்து சென்றுகொண்டிருந்தபோது குழந்தையை கடத்தி செல்வதாக மன்னார்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் புகார் கொடுத்து மனுதாரரை போன் மூலம் காவல் நிலையத்திலிருந்து அழைத்து 31.03.2018ல் எதிர்மனுதாரரிடம் குழந்தையை ஒப்படைக்க மனுதாரரை கையெழுத்து போடும்படி ஒரு எழுதாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கி கொண்டனர் என்றும், எதிர்மனுதாரர் மனுதாரருடன் வாழ விருப்பம் இல்லை என்று தெரிவித்ததால் மனுதாரர் எதிர்மனுதாரருக்கும், குழந்தைக்கும் ஒரு தொகை செட்டில்மென்ட்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.10 15:22:55 +0530

செய்வதற்கு தயாராக வர வேண்டும் என்றும் தெரிவித்து காவல் நிலையத்தார் அனுப்பிவிட்டார்கள் என்றும், மனுதாரர் நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.82/2018 சேர்ந்து வாழ பரிகாரம் கோரி மனுதாக்கல் செய்து 24.06.2016 தேதியில் இருதரப்பு உறவினர்கள் முன்னிலையில் சுமுக தீர்வு ஏற்பட்டு வழக்குகளை வாபஸ் வாங்கி கொண்டு இருவரும் சேர்ந்து வாழ்ந்தனர் என்றும், மனுதாரர் தனது குழந்தையை பாப்பாகோவில் என்ற ஊரில் உள்ள CBSE பள்ளியில் சேர்த்து படிக்க வைத்திருந்தநிலையில் 2024 ஏப்ரல் மாத கடைசியில் குழந்தைக்கு பள்ளியில் விடுமுறை விட்டதும் எதிர்மனுதாரர் மனுதாரர் வீட்டிலிருந்த 50 சவரன் நகைகளை எடுத்துக்கொண்டு குழந்தையுடன் சென்றுவிட்டார் என்றும், மேற்படி விவரம் மனுதாரருக்கு தெரிந்து எதிர்மனுதாரரிடம் கேட்டபோது அவரது தாயார் மற்றும் சகோதரனிடம் இருப்பதாகவும், அடமானம் வைத்திருப்பதாகவும், அடகு வைத்த நகைகளை மீட்டு கொடுத்தபிறகு வாழ போகலாம் என்றும் அவர்கள் தெரிவித்ததாகவும், தற்பொழுது வாழ வரமுடியாது என்றும் எதிர்மனுதாரர் கூறிவிட்டார் என்றும், 30.07.2024 காலை சுமார் 8.30 மணியளவில் எதிர்மனுதாரரையும், குழந்தையையும் மனுதாரர் பார்க்க சென்றபோது எதிர்மனுதாரரின் தாயார் மற்றும் சகோதரர் ஆயுதங்களுடன் வந்து மனுதாரரை வெட்டி காயப்படுத்தியதால் மன்னார்குடி காவல் நிலையத்தில் மனுதாரர் புகார் கொடுத்து, விசாரணைக்கு வர மறுத்த எதிர்மனுதாரரும் அவரது தாயாரும் 5 ஆண்டு காலமாக மலேசியா நாட்டிலேயே இருந்து வரக்கூடிய பாக்கியராஜ் என்பவரும் எதிர்மனுதாரரை வன்கொடுமைகள் செய்ததாக குறிப்பிட்டு மன்னார்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 ல் DVC No.34/2024 வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றும், தற்போதும் மனுதாரர் தனது மனைவி மற்றும் குழந்தையை அழைத்து சென்று வாழ வைக்க தயாராகவே இருக்கிறார் என்றும், எதிர்மனுதாரர் தரப்பார் அதற்கு ஒத்து வரவில்லை என்றும், எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ்வதற்கு தயாராகவும் இல்லை என்றும், அதனால்

மனுதாரர் தன்னுடைய சட்டப்பூர்வமான மனைவியான எதிர்மனுதாரரை தன்னுடன் சேர்ந்து வாழ உத்தரவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டு எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ பரிகாரம் கோரி இந்த மனுவினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

II. மனுதாரரின் மனுவின் அடிப்படையில் எதிர்மனுதாரருக்கு உரிய முறையில் நீதிமன்றம் மூலமாக அழைப்பாணை அனுப்பி பெற்றுக் கொண்ட எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றம் ஆஜராகியிருந்தபோதிலும் எதிருரை தாக்கல் செய்யாததால் எதிர்மனுதாரரை 12.11.2025 அன்று தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## III. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை

1. மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

2. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பு தரப்பு சான்றாவணங்களாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

## IV. பிரச்சனைக்கான தீர்வு

1) இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 23.01.2013-ல் திருமணம் நடைபெற்றுள்ளது. இந்த மனுவின் மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்புவதாலும், எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ விருப்பம் தெரிவிக்காத நிலையில், மனுதாரருடன், எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ உத்தரவிட வேண்டுமென்று பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.10 15:23:08 +0530

2) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை நிரூபிக்கும் விதமாக மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதாரர் நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தில் தன்னுடைய மனுவில் உள்ளவாறு குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். மனுதாரர் தனது கட்சிக்கு ஆதரவாக 23.01.2013 தேதியிட்ட திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ-1 ஆகவும், எதிர்மனுதாரருக்கு மனநல மருத்துவரிடம் சிகிச்சை கொடுத்ததற்கான சீட்டு ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரர் மன்னார்குடி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் நகல் ம.சா.ஆ.3 ஆகவும், எதிர்மனுதாரர் மனுதாரர் மற்றும் அவரது தாயாருக்கு எதிராக மன்னார்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த DVC.No.34/2024 ன் மனு ம.சா.ஆ.4 ஆகவும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பிறந்த குழந்தை பிரவீனுக்கு CBSE பள்ளியில் வழங்கிய கல்வி கட்டணத்திற்கான ரசீது நகல் ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3) மனுதாரர் தன்னுடைய மனுவிலும், சாட்சியத்திலும் குறிப்பிட்டு உள்ளவாறு, நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ள கூற்றையும் பொய் என்றோ அல்லது தவறானது என்றோ குறிப்பிட்டு எதிர்மனுதாரர் எவ்வித ஆட்சேபணையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்நீதிமன்றத்திலிருந்து எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிர்மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றம் ஆஜராகியிருந்த போதிலும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை மறுத்து எதிருரை தாக்கல் செய்யவில்லை.

4) மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ இந்த மனுவை தாக்கல் செய்திருந்தாலும், மனுதாரர் எதிர்மனுதாரர் குறித்து கூறப்படும்

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.10 15:23:15 +0530

குற்றச்சாட்டுகள் இயற்கையாக ஒரு இந்து கூட்டுக்குடும்பத்தில் ஏற்படும் சச்சரவுகளாக அமைந்துள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் பிறந்துள்ள குழந்தையின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, இனிவருங்காலத்தில் மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்வதுதான் அவர்களின் எதிர்காலத்திற்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுவதால் மனுதாரர் தாக்கல் செய்த மனுவை அனுமதிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரருடன் எதிர்மனுதாரரும், அவரது குழந்தையும் சேர்ந்து வாழ வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக ,**

1. **மனுதாரர் தாக்கல் செய்த மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**
2. **மனுதாரருடன் எதிர்மனுதாரரும் குழந்தையும் சேர்ந்து வாழ வேண்டும் என்று இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 10.07.2026 ல் அவையறிய பகரப்பட்டது.

S INDRA GANDHI
Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.10 15:23:21 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

ம.சா.1 திரு. முனுசாமி ( மனுதாரர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 23.01.2013 | திருமண அழைப்பிதழ் | (அசல்) |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.2 | 27.08.2018 | எதிர்மனுதாரருக்கு மனநல மருத்துவ மருத்துவமனையில் சிகிச்சை கொடுத்ததற்கான சீட்டு | (நகல்) |
| ம.சா.ஆ.3 | 30.07.2024 | மனுதாரர் மன்னார்குடி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் | (நகல்) |
| ம.சா.ஆ.4 | -- | எதிர்மனுதாரர் மனுதாரர் மற்றும் அவரது தாயாருக்கு எதிராக மன்னார்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 ல் தாக்கல் செய்த DVC.No.34/2024 மனு | (நகல்) |
| ம.சா.ஆ.5 | -- | மனுதாரரின் குழந்தை பிரவீனுக்கு CBSE பள்ளியில் வழங்கிய கல்வி கட்டணத்திற்கான ரசீது | (நகல்) |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** : இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை.

S INDRA GANDHI
Digitally signed by S INDRA GANDHI
Date: 2026.07.10 15:23:27 +0530

சார்பு நீதிபதி,
நாகப்பட்டினம்.

Draft / Fair **உத்தரவு**
சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்
**H.M.O.P.No.112/2014**
நாள் : 10.07.2026